**24.04.2025**

**O.S.No.143/2018**

**வா.சா.1 : பழனிவேல்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

9) மேற்படி நீதிமன்ற உத்தரவிட்ட படி அசல் ஒப்பந்த பத்திரம் 22.05.2012 தேதியிட்டது, மேலும் கால வாய்தா நீட்டிப்பு ரசீது ஆகியவை நான் கொண்டு வந்துள்ளேன். அவை பிரதிவாதி தரப்பு சான்று ஆவணங்களாக பி.வா.சா.ஆ-1,2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) நான் முதன் முதலில் 27.08.2019-ல் தாக்கல் செய்து பதிலுரையில் கால வாய்தா நீட்டிப்பு பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த கூடுதல் பதிலுரையில் 22.11.2013ம் தேதியிட்ட ரசீது எழுதிக்கொடுத்தாக சொல்லிவிட்டு ஏற்கனவே நான் 1ம் வாதியிடம் ஏற்கனவே பெற்ற நிரப்படாத பச்சை தாள்களில் உள்ள கையெழுத்து வைத்து வழக்கு பின்னிட்டு நான் தயார் செய்துக்கொண்டேன் என்றால் அது தவறு. அவ்வாறு நான் எந்தவித கையெழுத்தும் பெறவில்லை.

11) பி. வா.சா.ஆ.2 ரசீதில் இடை செருகலாக மேலும் 18 மாதம் (22.11.2013) இல் இருந்து என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ரசீதில் சாட்சிகளின் தகபனார் பெயரோ, முகவரியோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ரசீதை எழுதியவர் சின்னசாமி, அவர் இறந்துவிட்டார். 22.11.2013ல் இருந்து 18 மாதம் கால வாய்தா முடிந்து பின்னிட்டு நான் எழுத்து மூலமாக நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வாய்மொழியாக நேரடியாக தான் கேட்டேன்.

12) பி.வா.சா.ஆ.2 என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் 1ம் வாதியிடம் கிரைய முன் தொகையாக கொடுத்த ரூ.1,75,000/-

தொகையை வட்டியுடன் கொடுக்கும் படி கூறினேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பதில் ரூ.1,75,000/-தொகையை வட்டியுடன் திருப்பி தர கோரி 1ம்வாதியிடம் கேட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாய்மொழியாக நேரடியாக கேட்டேன்.

13) நான் தாக்கல் செய்து வாக்குமூலத்தில் 2 பக்கத்தில் 4வது பத்தியில் தாவா ஒப்பந்த பத்திரம் எனக்கும் 1ம் வாதிக்கும் இடையே ஏற்பட்டதால் இதை ரத்து செய்ய கோர 2,3, வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாக முதல் வரியில் நான் சொன்னதற்கு முரணாக 1ம் வாதியுடன் சேர்ந்து 2,3 வாதிகள் சேர்ந்து கூட்டாக என்னிடம் பெற்ற தொகையை வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

14) நிருபண வாக்குமூலத்தில் பரிகாரத்தில் வாதிகள் 3வரும் சேர்ந்த என்னிடம் பெற்ற தொகையை ஏமாற்ற வேண்டி கெட்ட நோக்கத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.வ.சா.ஆ-1 படி உள் வாய்தா காலமான 18 மாதம் 22.11.2013ல் முடிகிறது என்றால் சரிதான். 22.11.2013ல் மேலும் 18 மாதம் வாய்தா வாங்கியிருந்தாலும், அதன் படியே 22.05.2015ல் முடிகிறது என்றால் சரிதான்.

15) நாளது வரை நான் ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தையோ அல்லது கொடுத்த தொகையை திருப்பிக்கேட்டோ நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்து முதல் பதிலுரையில் 7 வது பத்தியில் கிரைய ஒப்பநத் பத்திரம் நாளது வரை அமுலில் உள்ள தாகவும், அந்த பத்திரத்தின் படி அந்த கிரைய சொத்தை நான் கிரையம் பெற தகுதியுள்ளது என்று சொல்லியுள்ளது என்றால் அது தவறு. நாளது வரை நான் ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தையோ அல்லது கொடுத்த தொகையை திருப்பிக்கேட்டோ நான் வழக்கு தாக்கல் செய்யதாதற்கு காரணம்

சொல்ல முடியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்ய என்னிடம் பணம் இல்லை. நான் விவசாயம் செய்த வருகிறேன். நான் கிழங்கு மில் செய்து இதில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது.

16) வழக்கு தாக்கல் செய்த பின்பு நான் ரவிந்தரம், துர்கா மீது போட்ட வழக்கில் நான் கிழங்கு மில் ஓட்டுவதாகவும், அவர்கள் 6-7 இலட்சம் பணம் கொடுத்தாக சொல்லியுள்ளேன். அந்த மில்லை லீசுக்கு எடுத்து ஒட்டினேன். வழக்கு தாக்கல் செய்ய வசதி இல்லை என்று சொல்லியுள்ள நிலையில் நான் வறியவர் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தெரிந்து இருந்தால் தாக்கல் செய்து இருப்பேன்.

17) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் 18 வாய்தாவிற்குள் 1 லக்கமிட்டவர் நடந்து கொள்ளாவிட்டால் 2ம் நபரிடன் செலுத்திய அட்வாண்ஸ் தொகை இழப்பதுடன் மேற்படி கிரையம் செல்லாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பொது வாசகம். 24.03.2017ம் தேதியிலே வாதிகள் என்னிடம் கணக்கு பார்த்து ரூ. 1,75,000/- யும் அதன் வட்டியும் சேர்த்து செலுத்தி மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் ரத்து செய்ய கோரியாதாகவும், அதை நான் தான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

18 அசல் கிரைய ஒப்பந்த பத்திரம் மற்ற ஆவணங்களுடன் கலந்து போய்விட்டதாக சொன்னதாகவும், எழுதி போட்டுக்கொடுத்த வெற்று பச்சை தாள்கள் மற்றும் காசோலைகள் பின்னிட்டு திருப்பி செலுத்துவதாக வாதிகளிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. வாதிகள் பலமுறை கேட்டும் அவ்வாறு நான் ஒப்புக் கொண்ட படி நடந்து கொள்ளாததால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கு பணம் வர வேண்டும் என்றால் வா. சா.ஆ.1 ன் படி நான்

கிரையம் பெறவோ பணத்தை திருப்பி தரவோ நடவடிக்கை எடுத்து இருப்பேன் என்றும் அவ்வாறு இல்லை என்பதாலும், வாதிகளிடம் இருந்து தூர் லாபம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை எதிர்கொண்டு பொய்யான பதிலுரை தாக்கல் செய்து வழக்கை நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி வழக்கு செலவு தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S
Date: 2025.04.24 18:24:39 +0530

**Subordinate Judge, Attur.**